ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2058/26 - 2018 පෙබරවාරි මස 14 වැනි බදාදා - 2018.02.14

*2058/ 26 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 5/2005*

***2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நீதியமைச்சர், தலதா அத்துகோறள ஆகிய நான், இக்கட்டளைமூலம், இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள இடப்பரப்பை, 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதிய 1901/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் தீர்மானிக்கப்பட்டவாறாகக் காணிகளின் உடைமை அல்லது சொத்தாண்மை தொடர்பான பிணக்குகளைத் தீர்த்துவைத்தல் அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் எந்த விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பினுள் நிறைவேற்றப்படவேண்டுமோ அந்த விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பொன்றாகக் குறித்துரைக்கின்றேன்.*

தலதா அத்துகோறள,<br>
நீதி அமைச்சர்.

கொழும்பு,<br>
*2018, பெப்புருவரி 08.*

***அட்டவணை***

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் அம்பாறை நிர்வாக மாவட்டம் ஒவ்வொன்றும்.

*03-64*